**Starting time 01.05 P.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 198/2014**

Deposition of **<u>D.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 01.11.2023 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : தர்மலிங்கம் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u> இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக இந்த வழக்கின் 2-ம் பிரதிவாதி என் மீதும், என் மகள் மீதும், பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால், ஆமாம். அந்த வழக்கில் நான் பதில் தாக்கல் செய்தேனா என்றால், எனக்கு நியாபகம் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையை நான் எடுத்துப் படித்துப் பார்த்தால் நியாபகம் வரும் என்றால், வரும். இந்த வழக்கின் வாதியான ராஜசேகர் அந்த வழக்கில் 2-ம் பிரதிவாதியாக பதில் தாக்கல் செய்துள்ளார் என்றால், ஆமாம்.

2. நான் பாகப்பிரிவினை வழக்கில் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் 1992-ல் எனக்கு பாகப்பிரிவினை மூலம் கிடைத்த சொத்து என்றும் அதனை இந்த வழக்கின் வாதிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைக்க எனக்கு முழு உரிமை உண்டு என்று நான் கூறியுள்ளேன் என்றால், நான் தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுக்கவில்லை. நான் தானசெட்டில்மெண்ட் பத்திரமே எழுதவில்லை.

3. 30.08.2010 தேதியன்று ஆத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 4393/2010 மற்றும் 4394/2010 ஆகிய தானசெட்டில்மெண்ட் ஆவணங்களை வாதி கேட்காமலேயே நான் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால், இல்லை. நான் எழுதவில்லை. நான் இதுவரையிலும் வாதி, பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுக்கவில்லையா என்றால், எழுதிக்கொடுக்கவில்லை என்று சாட்சி முதலில் கூறிவிட்டு பின்னிட்டு வாதிக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றும், பிரதிவாதிக்கு மட்டும்தான் எழுதிக்கொடுத்ததாக சாட்சி கூறுகிறார். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் வா.சா.ஆ.5 -ல் உள்ள கையெழுத்து என்னுடையதுதானா என்றால், அது என்னுடைய கையெழுத்து அல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தை சாட்சியிடம் காட்டி அதிலுள்ள கையெழுத்து அவருடையது தானா என்று கேட்டதற்கு சாட்சி இல்லை என்று கூறுகிறார்.

4. பதிவாளர் அலுவலகத்தில் ஒரு ஆவணத்தில் சாட்சி கையெழுத்து போடுவதற்கும், ஆவணத்தில் கையொப்பம் போடுவதற்கும் எனக்கு வித்தியாசம் தெரியும் என்றால், தெரியும். வா.சா.ஆ.1-ல் உள்ள கையெழுத்து என்னுடையது தானா என்றால், சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு அது தன்னுடைய கையெழுத்து அல்ல என்றும் கூறுகிறார். தாவா சொத்தை யார் அனுபவித்து வருகிறார்கள் என்றால், என் மனைவி இறந்த பிறகு நான் அந்த வீட்டை விட்டு வெளியேறி எனது தாயார் சமாதி இருந்த இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகிறேன். எனது மூத்த மகன் என்னுடைய வீட்டிற்கு சென்றுவிட்டார்.

5. எனது மூத்த மகன் அந்த வீட்டை அனுபவித்து வருவது சம்மந்தமாக பாகப்பிரிவினை வழக்கை என் சின்னமகனும், மகள்களும் தாக்கல் செய்தார்கள் என்றால், ஆமாம். எனது மூத்த மகன் தான் சொத்தை அனுபவித்து வருவதில் என்னுடைய மற்ற வாரிசுகள் இடையூறு ஏற்படத்தக்கூடாது என்று 2011-ல் ஒரு வழக்கு போட்டார் என்றால், அதுப்பற்றி எனக்கு தெரியாது.

6. என்னுடைய பிராமண வாக்குமூலத்தில் 3-ம் பக்கத்தில் என்னுடைய மூத்த மகன் ராஜசேகரன் என்னுடைய மற்ற வாரிசுகள் மீது அசல் வழக்கு எண். 272/2011 நிரந்தர உறுத்துக்கட்டளை தாக்கல் செய்ததாக கூறியுள்ளேன்என்றால், இல்லை. என்னுடைய சாட்சியத்திலேயே மேற்படி வழக்கு குறித்து சொல்லிவிட்டு தற்போது வழக்கிற்காக சொல்லவில்லை என பொய்யாக கூறியுள்ளேன் என்றால், சரியல்ல.

7. வாதி அசல் வழக்கு எண். 272/2011 வழக்கை தாக்கல் செய்து விவரம் தெரிந்து மூன்று வருடங்கள் கழித்து அந்த பத்திரத்தை நான் ரத்து செய்துவிட்டேன் என்றால், தெரியாது. எந்த ஆண்டு ரத்து செய்தேன் என்றால், அதுப்பற்றி தெரியாது. 2011-லிருந்து அந்த சொத்திற்குண்டான வருவாய்த்துறை ஆவணங்கள் வாதி பெயரில் உள்ளதா என்றால், எனக்கு தெரியாது. வா.சா.ஆ.11-ஐ சாட்சியிடம் காட்டி அது யார் பெயரில் உள்ளது என்று கேட்டதற்கு என்னுடைய மகன் ராஜசேகரன் பெயரில் தான் இருக்கிறது. ஆனால் நான் எழுதிக்கொடுக்கவில்லை.

8. 2011-ல் என் பெரிய மகன் ராஜசேகரனுக்கு நான் தானசெட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்து அதன் அடிப்படையில் அவர் பட்டா பெயர் மாறுதல் பெற்று அனுபவித்து வருகிறார்கள் என்றாலும், இல்லை. 2011-ஆம் ஆண்டு என் சுயநினைவுடன் ராஜசேகரன் பெயருக்கு சொத்தை தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்துவிட்டேன் என்றாலும், அதனடிப்படையில் வருவாய்த்துறை ஆவணங்களையும் அவர் மாற்றிக்கொண்டுவிட்டார் என்றால், தற்போது வழக்கிற்காக இல்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Ending Time: 01.35 P.M.

ஒப்பம்/- **N.** திலகேஸ்வரி

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**,** ஆத்தூர்**.**